सत्यमेव जयते

# ஊடக அறிக்கை

**விடயம்: இந்திய அரசால் வழங்கப்படும் இளமாணி முதுமாணிக் கற்கைகளுக்கான புலமைப்பரிசில் 2013-2014**

தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து இந்திய அரசால் வழங்கப்படும் இளமாணி முதுமாணிக் கற்கைகளுக்குரிய புலமைப்பரிசிலுக்கான 2013-2014 ஆம் கல்வியாண்டிற்கான "ஆயுஷ் புலமைப்பரிசில்" திட்டத்தின்கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஆயுர்வேதம், சித்த மருத்துவம், யுனானி, ஹோமியோபதி மற்றும் யோகா என்பவற்றுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது.

வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை எட்டு (08) ஆகும். செயலாளர், உயர்கல்வி அமைச்சு, இல.18, வார்ட் பிளேஸ், கொழும்பு 07 எனும் முகவரியை விண்ணப்பங்கள் அடையவேண்டிய கடைசித் திகதி 19, ஜூலை 2013 ஆகும்.

**இளமாணிக் கற்கைகளுக்கான அடிப்படைத் தகைமைகள்**

1. 19.07.2013 இல் 22 வயதுக்குட்பட்ட இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட க.பொ.த. உயர்தர பரீட்சையில் தான் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்கும் பாடத்துறைக்கு தொடர்பான பாடங்களில் அனைத்துப் பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும்
3. ஆங்கில மொழியில் உயர் பரிச்சயம்
4. நல்ல உடல் ஆரோக்கியமும் கற்கைக் காலத்தில் இந்தியாவில் வசிக்கத் தயாராகவிருத்தலும்
5. அரச துறையில் அல்லது நியதிச்சபையில் கடமையில் இருக்காமை
6. இளமாணிப் பட்ட நெறிக்கு ஏதாவது பல்கலைக்கழகம் ஒன்றில் ஏற்கனவே தம்மைப் பதிவு செய்திருக்காமை அல்லது அரச துறை உயர்கல்வி நிறுவனமொன்றில் முழுநேரக் கற்கை நெறிக்கு தம்மைப் பதிவு செய்திராமை.
7 க.பொ.த. உயர்தர பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பாடநெறியில் சித்தி பெற்றிருத்தல்

**முதுமாணிக் கற்கைகளுக்கான அடிப்படைத் தகைமைகள்**

1. 19.07.2013 இல் 45 வயதுக்குட்பட்ட இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. CCIM ஆல் அங்கீகரிக்கப்பட்ட BAMS பட்டம் பெற்றிருத்தல் அத்துடன் கலாநிதிப்பட்டம் பெற விரும்புபவர் ஆயுர்வேதத்தில் CCIM ஆல் அங்கீகரிக்கப்பட்ட MD பட்டம் பெற்றிருத்தல்
3. இலங்கையின் பொதுத்துறை நிறுவனத்தில் அல்லது பல்கலைக்கழகத்தில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் கடமை செய்தல்
4. ஆங்கில மொழியில் உயர் பரிச்சயம் ( க.பொ.த. சாதாரண தரத்தில் திறமைச் சித்தி (C) )
5. நல்ல உடல் ஆரோக்கியம்
6. தற்காலிக அல்லது அமைய நிலையிலுள்ள ஒப்பந்த ஊழியர் விண்ணப்பிக்க முடியாது.

மேலதிக விபரமும் விண்ணப்பப் படிவமும் உயர்கல்வி அமைச்சின் இணையத்தில் (www.mohe.gov.lk ) பெறப்படமுடியும்.

வடமாகாண விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தை மேலதிக விளக்கத்துக்காக பின்வரும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளலாம். cgi.jaffna@gmail.com